மாண்புமிகு திரு செ. மாதவன் : கல்லூரிகளிலே மொழிப் பயிற்சி பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. அவர்கள் நடத்தக்கூடிய குஜராத்தி, மராட்டி பள்ளிகளிலே எஸ்.எஸ்.எல்.சி. கேள்வித் தாள்களை கூட குஜராத்தியிலேயேயும், மராட்டியிலேயேயும் தயாரிக்கப்படுகின்றன. அவர்கள் அந்த மொழிகளைக் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. கல்லூரிப் பயிற்சி மொழியைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

Polytechnic **s**

*482 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :,

(*a*) whether the re-constituted Southern Regional Committee of the All India Council for Technical Education has recommended the setting up of two Polytechnics on a "Sandwich pattern" in Madras; and

(*b*) if so, the salient features of the recommendation ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தொழில் நுட்பக் கல்வி குறித்த அனைத்திந்திய மன்றத்தின் தெற்கு வட்டாரக் குழு ஒரு குழுவினை நிறுவியுள்ளது. இக்குழு ஏற்படுத்த விழைகிற தொழில் உடலுழைப்பு வகையினையும், ஏற்படுத்த வேண்டிய பல்வேறு பாடமுறைகளின் அவசியத்தையும், சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை, படிப்பிலடங்கி இருக்க வேண்டிய பாடப் பொருள்கள், சென்னை மாநகரில் ஏற்படுத்தவிருக்கிற இவ்விரு பல் தொழிற் பள்ளிகளிலும் பணியிடைக் கல்வி முறையை (sandwich Type) ஏற்படுத்தி, நடத்துவதற்கு வேண்டிய நிதி வசதியின் மதிப்பீடுகளையும் இக்குழு ஆய்வு செய்யும். இது குறித்து தெற்கு வட்டாரக் குழுவின் முடிவான பரிவுரை எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 483-ஐயும் எடுத்துக் கொள்ளலாம்.

*483 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(*a*) whether the Government proposes to start agricultural polytechnics in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

THIRU K. VINAYAKAM : I submit to the ruling of the Chair. The first question is different from the second question.

May I know in which two polytechnics the Government propose to introduce sandwich courses after the receipt of the report envisaged by the Minister ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : சாண்ட்விச் கோர்ஸ் இப்போதே இருக்கிறது. சென்னையில் உள்ள சென்ட்ரல் பாலிடெக்னிக்கிலும் மதுரையில் உள்ள பாலிடெக்னிக்கிலும் அதைப் பின்பற்றி பாடத்திட்டத்திலே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த கோதாரி, எ.வி.எம். சாரிடீஸ் தாங்கள் புதிதாகத் திறக்கவிருக்கிற பாலி